www.kalvisolai.com

+ 2 இயற்பியல் * முதல் திருப்புதல் தேர்வு ( அலகுகள் - 1 முதல் 5 வரை ) * ஆண்டு : 2012 - 13 மொத்த மதிப்பெண்கள் : 75

**பகுதி: அ சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.** *( 10 X 1 = 10 )*

1. சம மின்னழுத்தப் பரப்பில் இரு புள்ளிகளிடையே மின்னூட்டத்தை நகர்த்த செய்யப்படும் வேலை
   a ) 0 b) ∞ c) 500 J d) 250 J
2. ஒவ்வொன்றும் 2 μF மின்தேக்குத்திறன் கொண்ட மூன்று மின்தேக்கிகள் தொடர் இணைப்பில் உள்ளன. அவைகளின் தொகுபயன் மின்தேக்குத்திறன்
   a ) 0 μF b) 3 / 2 μF c) 6 μF d) 2 / 3 μF
3. கார்பன் மின்தடையாக்கியில், வெள்ளி வளையத்தின் மாறுபாட்டு வீச்சு அளவு
   a ) 1 % b) 2 % c ) 10 % d ) 5 %
4. வெப்பநிலை குறையும் போது, மின்காப்புப் பொருள்களின் தன்மின்தடை எண் மதிப்பு
   a ) குறையும் b ) அதிகமாகும் c ) மாறாது d ) சுழியாகும்
5. பெல்டியர் குணகத்தின் அலகு
   a) ampere b) kelvin c ) volt d ) second
6. நீண்ட நேர்க்கடத்தி ஒன்றின் தன்மின் தூண்டல் எண் மதிப்பு
   a ) சுழி b ) முடிவிலி c ) மிக அதிகம் d ) மிகவும் குறைவு
7. சைக்ளோட்ரானில், முடுக்கப்படும் மின்னூட்டம் பெற்ற துகளின் சுற்றியக்கக் காலம் எதனைச் சார்ந்ததல்ல?
   a ) காந்தத் தூண்டல் b ) துகளின் மின்னோட்டம் c ) துகளின் திசைவேகம் d ) துகளின் நிறை
8. ஒற்றை நிற ஒளிக்கற்றை, வெற்றிடத்திலிருந்து μ ஒளிவிலகல் எண் கொண்ட ஊடகத்திற்குள் நுழைகிறது. படும் மற்றும் விலகலடைந்த அலைகளின் அலைநீளங்களின் தகவு
   a ) μ : 1 b ) 1 : μ c ) $\mu^2$ : 1 d ) 1 : $\mu^2$
9. மின்காந்த அலைகள் என்பன
   a ) குறுக்கலைகள் b ) குறுக்கலைகளாகவோ அல்லது நெட்டலைகளாகவோ இருக்கலாம்
   c ) நெட்டலைகள் d )குறுக்கலைகளும் அல்ல - நெட்டலைகளும் அல்ல.
10. 0.005 m அகலத்தில் 2500 உள்ள கீற்றணியின் மீது 6000 $A^0$ அலைநீளமுள்ள ஒளியானது நேர்குத்தாகப்படுகின்றது. அதன் பெரும வரிசை என்ன ?
    a ) 3 b ) 2 c ) 1 d ) 4

**பகுதி: ஆ எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி** *( 10 X 3 = 30 )*

11. வானம் நீல நிறத்தில் தோன்றக் காரணம் என்ன ?
12. டிண்டால் ஒளிச்சிதறல் என்பது யாது ?
13. சாதாரண ஒளிக்கும், அசாதாரண ஒளிக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் தருக.
14. ∴பிளெமிங் வலது கை விதியைக் கூறுக.
15. தூண்டப்பட்ட மின் இயக்குவிசையை தோற்றுவிக்கும் முறைகள் யாவை ?
16. தரக்காரணி ( Q - காரணி ) என்பது யாது ?
17. 2 மீட்டர் நீளமும், 0.4 மிமீ விட்டமும் உடைய கம்பியின் மின்தடை 70 ஓம். பொருளின் தன்மின்தடை எண்ணைக் கணக்கிடுக.
18. ஓம் விதியைக் கூறுக.
19. மீக்கடத்திகள் என்பவை யாவை ?
20. பெல்டியர் குணகம் வரையறு.
21. ஆம்பியர் வரையறு.
22. நீண்ட நேர்க்கடத்தி வழியே 10 A மின்னோட்டம் பாயும் போது, அதிலிருந்து 10 செமீ தொலைவிலுள்ள புள்ளியில் காந்தத்தூண்டலைக் கணக்கிடுக.
23. மின் இருமுனை என்பது யாது ? அதன் திருப்புத்திறனை வரையறு.
24. இடி, மின்னலின் போது ஒரு மரத்தின் அடியில் நிற்பதைக் காட்டிலும் ஒரு காரின் உள்ளே இருப்பது பாதுகாப்பானது. ஏன் ?
25. ஒரு இணைத்தட்டு மின்தேக்கியின் மின்தேக்குத்திறன் 3.186 X $10^{-11}$ F மற்றும் இது 400 வோல்ட் மூலத்துடன் இணைக்கப்பட்டு மின்னேற்றம் செய்யப்படுகிறது எனில், அதில் தேக்கி வைக்கப்பட்டுள்ள ஆற்றல் எவ்வளவு ?

**பகுதி: இ எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி ( வினா எண் 28 க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்)** *( 3 X 5 = 15 )*

26. இணைத் தட்டு மின்தேக்கியின் தகடுகளுக்கிடையே மின்காப்புப் பொருள் உள்ள போது மின்தேக்குத் திறனுக்கான கோவையைப் பெறுக.
27. சீரான மின்புலத்தில் வைக்கப்படும் மின்இருமுனை மீது செயல்படும் திருப்பு விசைக்கான கோவையைப் பெறுக.
28. காற்றில் 10 செமீ இடைவெளியில் 5 மீ நீளமுள்ள இரு கடத்திகள் இணையாக வைக்கப்பட்டுள்ளன. இரண்டிலும் ஒரே அளவிலான மின்னோட்டம், ஒரே திசையில் பாயும் போது 3.6 X $10^{-4}$ நியூட்டன் கவர்ச்சி விசை செயல்பட்டால், கடத்திகளில் பாயும் மின்னோட்டங்களைக் கணக்கிடுக.

    ( அல்லது )

    காற்று உள்ளகத்தைக் கொண்ட வரிச்சுருள் ஒன்று 4 செமீ விட்டத்தையும், 60 செமீ நீளத்தையும், 4000 சுற்றுகளையும் கொண்டுள்ளது. வரிச்சுருளின் வழியே 5 ஆம்பியர் மின்னோட்டம் பாய்வதாகக் கொண்டு அதில் சேமிக்கப்பட்டுள்ள ஆற்றலைக் கணக்கிடுக.
29. மின்தடையாக்கி மட்டும் உடைய AC மின்சுற்றின் செயல்பாட்டை விவரி.
30. நியூட்டன் வளைய ஆய்வில், n ஆவது கருமை வளையத்தின் ஆரத்திற்கான கோவையைப் பெறுக.

**பகுதி: ஈ எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி** *( 2 X 10 = 20 )*

31. வான் - டி - கிராப் மின்னியற்றியின் அமைப்பு மற்றும் செயல்பாட்டை விளக்குக.
32. டேன்ஜன்ட் கால்வனாமீட்டரின் அமைப்பு மற்றும் செயல்பாட்டை விளக்குக.
33. AC மின்னியற்றியின் அமைப்பு மற்றும் செயல்பாட்டை விளக்குக.
34. மெல்லிய ஏடுகளில் ஒளி எதிரொளிப்பதால் ஏற்படும் குறுக்கீட்டு விளைவை விளக்கி, பெரும , சிறும ஒளிச் செறிவுக்கான நிபந்தனைகளைப் பெறுக.

**@@@@ BEst wishes @@@@**

இளையபெருமாள் கல்வி மேம்பாட்டு